**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் -3 - 2017**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் -3 இன் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 ஆகஸ்ட் 11 ஆம் திகதிய 3348 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவு மற்றும் 3349- எஸ்ஆர்ஜ-(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவு ன்பவற்றுடன் சேர்த்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் 2016 ஆகஸ்ட் 11 ஆம் திகதிய செயற்திட்ட உடன்படிக்கையின் 2.10 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம்- 3 இன் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நிழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளின் முறைமை வினைத்திறன் மற்றும் நிதி நிலைபேண் தன்மையை முன்னேற்றுவதே நிகழ்சித்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 29,642.60 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 228.02 மில்லியனானதுடன் அதில் ரூபா 15,990 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 123 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சாதாரண மூலதன வளங்களால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்ட அதேநேரம் ரூபா 650 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 5 மில்லியன் ஆசிய அபிவிருத்தி நிதியத்தின் விசேட நிதி வளங்களால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 7,742.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 59.56 மில்லியன் ஐரோப்பிய முதலீட்டு வங்கியால் (ஈஐபீ) பீநிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 5,259.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 40.46 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. மேலும், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயத்தில், ரூபா 7,231.90 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 55.63 மில்லியன் ஒதுக்கீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகளை அமுலாக்குவதற்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 22,410.70 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 172.39 மில்லியன் கொழும்பு மா நகர சபையால் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகளிற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கையானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் மீதான அவதானிப்புக்களைக் கொண்டுள்ளது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 நவம்பர் 03 இல் தொடங்கியிருந்ததுடன் 2020 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயல் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ச்சியான அடிப்படையில் காட்டக்கூடியவாறு போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப முற்பணங்கள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானது இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும் இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப முற்பணங்கள், அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியாதிருந்ததென்றும்

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 31 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2018 மே 31 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் தைவிர்ப்பு பட்டியல்களின் பிரகாரம், கடனளிக்கும் முகவர் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் பெறுகைகளிலிருந்து ரூபா 16.79 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 110,187 கடப்பாட்டுக் கட்டணங்கள் அறவிடப்பட்டது. எவ்வாறாயினும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையுடன் தொடர்புபட்ட கடப்பாட்டுக் கட்டணங்கள் பிரிக்கப்பட்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் கைதவிர்ப்பு கைநூலின் 4.12 ஆம் பிரிவில் வேண்டப்பட்டவாறு நிதிக்கூறுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

**3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒடுக்கீடு | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | | | | | | | |
| ஓசீஆர் | 123.00 | 15,990.00 | 38.00 | 4,940.00 | - | 0.07 | 10.29 |
| எஸ்எவ்ஆர் | 5.00 | 650.00 | - | - | - | - | - |
| ஈஜபீ | 59.56 | 7,742.80 | - | - | - | - | - |
| இலங்கை அரசாங்கம் | 40.46 | 5,259.80 | 17.63 | 2,291.90 | - | - | - |
| மொத்தம் | 228.02 | 29,642.60 | 55.63 | 7,231.90 | - | 0.07 | 10.29 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிகழ்ச்சிதிட்டத்தின் நடவடிக்கைகளை அடைவதற்கு பொறுப்புடைய உத்தியோகத்தர்களின் நிர்ணயிக்கின்ற பொறுப்புக்களுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் முழுக்காலப்பகுதியையும் மேவுகின்ற நிதி மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டுகின்ற ஒட்டுமொத்த விரிவான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் 2016 நவம்பர் 03 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக எவ்வித பாதீட்டு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.2 பௌதீக முன்னேற்றம்**

----------------------------------

நிகழ்ச்சித்திட்டத்தன் கொள்வனவு திட்டத்தின் பிரகாரம், ஆலோசனை சேவைகள், நிலப்பரப்பு அளவைகள், மண்பரிசோதனை ஆய்வுகள், வீதிப் படம், மின்னியல் மாதிரியிடல் மற்றும் உப செயற்திட்டங்களை முன்னுரிமைப்படுத்துவதற்கான உபகரணங்களின் கொள்வனவு போன்ற 21 ஒப்பந்த தயாரிபடுத்தல் வேலைகள் மீளாய்வாண்டின் போது தொடங்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவற்றில் 08 ஒப்பந்த வேலைகள் மாத்திரமே மீளாய்வாண்டு இறுதியில் வழங்கப்பட்டிருந்ததுடன் அத்திகதியில் உ்ளவாறு அவற்றின் மீது எவ்வித பௌதீக முன்னேற்றமும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.